**காலை வழிபாட்டுக் கூட்ட செயல்பாடுகள்**

**தமிழ் வருடம் விகாரி ஆண்டு, மாசி மாதம் 30ஆம் நாள்**

**2020ஆம் ஆண்டு மார்ச் 13ஆம் தேதி, வெள்ளிக்கிழமை**

குறள்:403

கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின்.

குறள் விளக்கம்:

கற்றவர் உள்ள சபையில் யாதொன்றையும் பேசாதிருப்பின், கல்லாதவரும் மிக நல்லவராகக் கொள்ளப் படுவார்.

**பொன்மொழி**

நாம் எப்போதுமே வாழ்வதற்குத்தான் தயாராகிக் கொண்டிருக்கிறோம். ஆனால் வாழ்வதில்லை.

**பழமொழி**

*Bend the twig, bend the tree*

ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையுமா?

**பொதுஅறிவு வினா விடை**

- திருச்சியில் உள்ள பல்கலைக்கழகம் – **பாரதிதாசன் பல்கலைக்கழகம்**
- கொடைக்கானலில் உள்ள பல்கலைக்கழகம் – **அன்னை தெரசா பல்கலைக்கழகம்**

**இரண்டொழுக்க உறுதிமொழி**

1. **ஒழுக்கமே என்னுடைய முதல் கற்றல் பணி என்பதை நான் அறிவேன். எனவே எந்நாளும் ஒழுக்கத்தைக் கடைபிடிப்பேன்.**
2. **யாருக்கும், எப்போதும் துன்பம் விளைவிக்க மாட்டேன். எல்லோரிடத்திலும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.**

*Abbreviations*

*D.D. - Demand Draft* - கேட்பு வரைவோலை

*DA - Dearness Allowance* - அகவிலைப்படி

## இன்றைய செய்திகள்

- 10-ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழில் இனி பெற்றோரின் பெயரும் இடம் பெறும் என்று அமைச்சர் செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.
- இந்தியா - தென் ஆப்பிரிக்கா அணிகளுக்கு இடையேயான முதல் ஒருநாள் போட்டி மழை காரணமாக ரத்து செய்யப்பட்டது.
- தமிழகத்தில் என்.பி.ஆர்.கணக்கெடுப்பு பணி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் தெரிவித்துள்ளார்.
- கொரோனா எதிரொலியால் மார்ச் 31 ஆம் தேதி வரை பள்ளி-கல்லூரிகள் மற்றும் திரையரங்குகள் மூடப்படும் என அறிவிக்கப்பட்டு உள்ளது.
- கொரோனா பாதிப்பு காரணமாக பார்வையாளர்கள் இன்றி ஐ.பி.எல். போட்டிகளை நடத்த மத்திய அரசு அறிவுறுத்தி உள்ளது.
- பூமியிலிருந்து 640 ஒளி ஆண்டுகள் தூரத்தில் உருகிய இரும்பு மழை பெய்யும் மிக சூடான கிரகம் கண்டு பிடிக்கப்பட்டு உள்ளது.
- இந்தியாவில் கொரோனா வைரசால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 73 ஆக உயர்ந்துள்ளது.
- தமிழகத்தின் மாநில திட்டக்குழு துணைத் தலைவராக பொன்னையன் பொறுப்பேற்றுக்கொண்டார்.
- மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் விளம்பர பலகை வைக்க தடை விதித்து சென்னை ஐகோர்ட்டு அதிரடி உத்தரவிட்டுள்ளது.

Sowndeeswari Middle School
Bodinayakanur - 625 513
Learn more in our School